பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

27 10 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், செஷல்சில் மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலத்தை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.
2. இந்திய கடல்சார் வார விழாவை, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மும்பையில் இன்று தொடங்கி வைக்கிறார்.
3. ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் 81 சதவீத கிராமப்புற வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. நேபாளத்தில், இடைக்கால பிரதமர் திருமதி சுசிலா கார்கி தலைமையிலான அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
5. தெற்காசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா, 20 தங்கம் உட்பட 58 பதக்கங்களை வென்றுள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், செஷல்ஸ் புதிய அதிபர் டாக்டர் Patrick Herminie-யின் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டார்.

இந்தியாவின் சார்பில், அவருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

Victoria நகரில் நடைபெற்ற இந்த விழாவின் இடையே, மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன் சந்திர ராம்கூலத்தையும், திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், சந்தித்துப் பேசினார்.

அப்போது, இந்தியா - மொரீஷியஸ் இடையேயான, வரலாறு மற்றும் கலாச்சார ரீதியான நட்புறவு வலுவாக உள்ளதாக, இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

இரு நாடுகள் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக, வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்திய கடல்சார் வார விழாவை, மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா, மும்பையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், 11 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் கடல்சார் தொழில்துறை பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

நாளை மறுநாள் நடைபெறும் சிறப்பு அமர்வில், பிரதமர் திரு.நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளதாக, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடல்சார் தொழிலில் ஈடுபட்டுள்ள உலகின் முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் கூட்டத்திற்கும், பிரதமர் தலைமையேற்க உள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

“சமுத்திரங்களை இணைத்தல், ஒரே கடல்சார் தொலைநோக்கு” என்பதே, இந்த ஆண்டிற்கான மையக் கருத்தாகும்.

<<<<>>>>

இந்தியா - சிங்கப்பூர் இடையேயான இருதரப்பு உறவு மற்றும் இரு நாட்டு மக்களிடையேயான நேரடி இணைப்புகளை வலுப்படுத்த சிங்கப்பூர் பிரதமர் திரு.அன்வர்

இப்ராஹிம் ஆர்வமுடன் உள்ளதாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்று வரும் ஆசியான் உச்சிமாநாட்டின் இடையே, அந்நாட்டுப் பிரதமரை சந்தித்த அவர், மாநாடு வெற்றிகரமாக நடைபெற பிரதமர் திரு.நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்ததையும் எடுத்துரைத்ததாக, தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாநாட்டில் பங்கேற்ற தென்கொரிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Cho Hyun-ஐயும் சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தியதாக,வும் திரு.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

வாகனத் தயாரிப்பு, மின்னணு சாதனம், செமிகண்டக்டர், பாதுகாப்பு தளவாடங்கள் மற்றும் கப்பல் கட்டும் தொழில் குறித்து, தென்கொரிய அமைச்சருடன் விவாதித்தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, சிங்கப்பூர் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.விவியன் பாலகிருஷ்ணன் மற்றும் தாய்லாந்து வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. Sihasak Phuangketkeow உள்ளிட்டோருடனும், இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தியதாக, டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் பல்வேறு மாநில சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெறும் இடைத்தேர்தலின்போது, பிரச்சாரம் முடிவடைந்த பிறகு, தொலைக்காட்சி,

வானொலி, கேபிள் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில், குறிப்பிட்ட கட்சி அல்லது வேட்பாளருக்கு சாதகமான நிகழ்ச்சிகளை, வெளியிடக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கருத்துக் கணிப்பு உள்ளிட்ட அம்சங்கள், நிகழ்ச்சிகளில் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

பீகாரில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் அடுத்த மாதம் 6ஆம் தேதி காலை 7 மணியிலிருந்து, இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நிறைவடைய உள்ள 11ஆம் தேதி மாலை மணி 6.30 வரை, தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிடக்கூடாது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் நாட்டின் கிராமப்புறங்களில் இதுவரை 15 கோடியே 72 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன்மூலம், நாட்டில் உள்ள 81 சதவீத கிராமப்புற வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் மட்டுமின்றி, பள்ளிகள், அங்கன்வாடி மையங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

<<<<>>>>

நேபாளத்தில், இடைக்கால பிரதமர் திருமதி சுசிலா கார்கி தலைமையிலான அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அந்நாட்டின் முன்னாள் சுகாதாரத்துறை செயலாளரான சுதா கௌதம், சமூக ஆர்வலர் பப்லு குப்தா ஆகியோர் புதிய அமைச்சர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

காத்மாண்டுவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், அதிபர் திரு. ராம்சந்திர பவுடேல் புதிய அமைச்சர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

எனினும், முக்கிய இலாகாக்களின் பொறுப்பை, பிரதமர் சுசிலா கார்கி, தொடர்ந்து தம்மிடமே வைத்துக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

லெபனானில் இஸ்ரேல் படைகள் நடத்திய வான் தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

ஹிஸ்புல்லா அமைப்பினரை குறிவைத்து Zawtar, Naqoura உள்ளிட்ட நகரங்களில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 3 பேர் ஹிஸ்புல்லா அமைப்பின் நிர்வாகிகள் என்றும், மற்றொருவர் அந்த அமைப்புக்கு ஆயுதங்களை வினியோகித்தவர் என்றும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இதனிடையே இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் ஐ.நா. அமைதிப் படையைச் சேர்ந்த ரோந்து வாகனம் ஒன்றும் இலக்கானதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்தத் தாக்குதலில் அமைதிப் படை வீரர்கள் யாரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மற்றும் பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா ஆகியோரை சந்தித்துப் பேசியுள்ளார்.

மரியாதை நிமித்தமாக நடைபெற்ற இந்த சந்திப்பின்போது பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக யோகி ஆதித்யநாத், கார்த்திகை பூர்ணிமாவை ஒட்டி உத்தரப்பிரதேசத்தில் கர்முக்தேஷ்வர் மற்றும் அம்ரோஹா பகுதியில் நடைபெற உள்ள கண்காட்சிக்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையின்போது பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 6 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பெண் தீவிரவாதி ஆவார். இவர்களிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொதுமக்களை அச்சுறுத்தி தீவிரவாதிகள் பணம் வசூலித்ததாக கிடைத்த தகவலின்பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் தலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு HIV தொற்று பரவியது குறித்து விசாரணை நடத்த அம்மாநில முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குழந்தைகளுக்கு செலுத்தப்பட்ட ரத்தம், HIV பாதிப்பு உடையது என்று கண்டறியப்பட்டதை அடுத்து, கவனக்குறைவாக செயல்பட்ட மருத்துவர், பரிசோனைக் கூட தொழில்நுட்ப பணியாளர் உள்ளிட்டோரை பணியிடை நீக்கம் செய்யவும் அவர் ஆணை பிறப்பித்துள்ளார்.

மேலும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பத்திற்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான மருத்துவ செலவை மாநில அரசே ஏற்கும் என்றும் திரு. ஹேமந்த் சோரன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

Montha புயலை எதிர்கொள்ள ஒடிசா மாநிலம் தயாராக இருப்பதாக அம்மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. சுரேஷ் புஜாரி தெரிவித்துள்ளார்.

புயலால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய கோராபுட், மல்காங்கிரி, கஞ்சம் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியபின் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒடிசாவில் உள்ள 30 மாவட்டங்களிலும் மழை வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தெற்காசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா, 20 தங்கம் உட்பட 58 பதக்கங்களை வென்றுள்ளது.

ராஞ்சியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா 20 வெள்ளி, 18 வெண்கலப் பதக்கங்களையும் வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

மகளிர் உயரம் தாண்டுதல் போட்டியில் Reet Rathore தங்கப் பதக்கத்தையும், Supriya வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் நீளம் தாண்டுதலில் Mohammed Sazid தங்கப் பதக்கத்தையும், Sarun Paya Singh வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா - பங்களாதேஷ் இடையேயான ஆட்டத்தின்போது மழை குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டு, இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

<<<<>>>>

சென்னை ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

வரும் 2ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்திய இளம் வீராங்கனைகளான மாயா ராஜேஸ்வரன் ரேவதி, ஸ்ரீவள்ளி பாமிதிபதி, சஹஜா யாமலபள்ளி ஆகியோர் நேரடியாக பிரதான சுற்றில் பங்கேற்கும் வகையில் Wild Card சலுகை வழங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியாவும், மொரீஷியஸும், இணைந்து, கடற்பரப்பு ஆய்வை, வெற்றிகரமாக முடித்துள்ளன.

இந்திய கடற்படைக் கப்பலான INS Sutlej - மொரீஷியஸ் தேசிய கடலோர காவல் படையுடன் சேர்ந்து PortLouie அருகே சுமார் 35 ஆயிரம் சதுர கடல்மைல் தொலைவிற்கு, இந்த ஆய்வை மேற்கொண்டது.

இருநாட்டுப் படையினரும் கூட்டாக மேற்கொண்ட இந்த ஆய்வின்போது, ஆள் மற்றும் போதைப்பொருட்கள் கடத்தலைத் தடுக்கும் வகையில், கூட்டு ரோந்து மேற்கொண்டதுடன், சிறப்புப் பொருளாதார மண்டல கண்காணிப்பிலும் ஈடுபட்டன.

<<<<The End>>>>